Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா; 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 17 01 - 07 - 1992 புதன்கிழமை ஓசை 134

## வவுனியாப் பகுதியில் வாக்காளர் இடாப்பு பதிவு

வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் 1992 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் இடாப்புக்களைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வாக்காளர்களும், பதினெட்டு வயதை இந்த வருடம் அடைந்துள்ளோரும் தமது பெயரைத் தவறாது வாக்காளர் இடாப்பில் புதுப்பிப்பதும் பதிவு செய்து கொள்ளவும் வேண்டும் எனத் தேர்தல் பகுதி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். [4 ஆம் பக்கம் பார்க்க]

## ( புல்லாவெளியில் மீண்டும் போர் )

# புலிகள் - ராணுவம் கடும் சமர்

# ஆறு கவச வாகனங்கள் சேதம்

### இனப்பிரச்சினைத் தீர்வு

## மத்தியஸ்தம் வகிக்க சுவீடன் அரசு விருப்பம்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குச் சமரச தீர்வு காண்பதில் மத்தியஸ்தம் வகிக்க சுவீடன் விரும்புவதாக இரு தரப்பினரும் விரும்பினால் மட்டுமே சுவீடன் மத்தியஸ்த முயற்சியை மேற்கொள்ள முடியும் எனப் பேராசிரியர் பீட்டர்லாஸ் கொழும்பு பத்திரிகையொன்றிற்குத் தெரிவித்துள்ளார்.

சுவீடன் உப்சலா பல்கலைக்கழகத்தின் சரித்திர பீடப் பேராசிரியரான இவர் எதிர்வரும் 18-ம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகைதரவுள்ளதாகவும், ஐந்து விரிவுரைகளை நிகழ்த்தவுள்ளதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில்

## புலிகளின் கண்ணிவெடிக்கு பொலிஸார் படுகாயம்

(கொழும்பு)

மட்டக்களப்பு கஞ்சிகுடிச்சாறு பகுதியில் உள்ள காட்டில் புலிகளின் கண்ணிவெடியில் ஐந்து பொலிஸார் படுகாயமடைந்தனர்.

புலிகளுக்கு எதிராகத் தாக்குதல் நடாத்த கஞ்சிகுடிச்சாறு காட்டுக்குள் நுழைந்த விசேட... [4 ஆம் பக்கம் பார்க்க]

## நேற்றும் அகோர குண்டுவீச்சு

(நமது நிருபர்)

புல்லாவெளிப் பகுதியில் நேற்று இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையே மீண்டும் கடும் போர் மூண்டது. அகோர விமானக் குண்டுவீச்சு, எறிகணை வீச்சுக்கு மத்தியில் புல்லாவெளிச் சந்தியை நோக்கி முன்னேறியபோதே இராணுவத்தினர்மீது புலிகள் கடும்தாக்குதலை மேற்கொண்டனர். இரவு 6.00 மணி வரை இச் சண்டை தொடர்ந்தது. இராணுவத் தரப்பில் ஆறு கவச வாகனங்கள் சேதம் அடைந்தன. பலர் கொல்லப்பட்டனர்.

புல்லாவெளிப் பகுதியில் மூன்று தினங்களுக்கு முன் இடம்பெற்ற முதலாவது கடும் சண்டையில இராணுவ தரப்பினருக்கு ஏற்பட்ட பெரும் இழப்பின் காரணமாக நேற்றுமுன்தினம் இராணுவத்தின் முன்னேறும் முயற்சிகள் இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

நேற்றுநண்பகல் 12 மணியளவில் இராணுவத்தினர் மீண்டும் முன்னேறும் முயற்சிகளை மேற்கொண்டபோது கடும் சண்டை மூண்டது. மாலை 6 மணிவரை இச்சண்டை நீடித்தது. இச்சண்டைகளில் இராணுவ தரப்பில பலத்த சேதம் (4 ஆம் பக்கம் பார்க்க)

## 4 புலிகள் வீரச்சாவு

புல்லாவெளிப் பகுதியில் கடும்குண்டு வீச்சு, எறிகணைத் தாக்குதல் மத்தியில் முன்னேற முயன்ற இராணுவத்தினரை தடுத்து நிறுத்த விடுதலைப் புலிகள் கடும தாக்குதல்களை மேற்கொண்டனர் இத்தாக்குதல்களில் நான்கு விடுதலைப் புலிகளின் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

வீரவேங்கை சோலைவண்... (4ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. ராணுவம் அட்டூழியம் 20க்கு மேற்பட்டோர் பலி

### பலர் கைது; ஹெலியும் தாக்குதல்

மட்டக்களப்பு கிராமங்களில் சிறிலங்கா இராணுவத்தினர் பொது மக்கள் மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தாலும், உலங்கு வானூர்தித் தாக்குதலாலும் 20க்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் சிலர் வெட்டியும் கொல்லப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் கொக்கட்டிச்சோலை, வவுணதீவு, 19 ஆம் கட்டை, உன்... (4 ஆம் பக்கம் பார்க்க)

## நன்றி

எமது நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பாளர் மேஜர் அழகன் (செல்வராசா இளங்கோவன், சாவகச்சேரி) வீரச்சாவெய்திய செய்தியறிந்து அவருக்கு அஞ்சலிச் செய்திகள் அனுப்பியோருக்கும், அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும், அன்னாரின் புகழுடல் எமது காரியாலயத்தில் வைக்கப்பட்டிருந்தபோது பெருந்திரளாகவருகைதந்து அஞ்சலிசெலுத்தியோருக்கும், மலர்கள் தூவி மாலைகளை, மலர் வளையங்களை வைத்தோருக்கும், கறுப்புக்கொடிகள், தோரணங்களால் அலங்கரித்தோருக்கும் மற்றும் பல்வேறு வகையிலும் எமக்கு உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


- ஈழநாதம்

## இந்திய புலனாய்வுதுறைக்கு இஸ்ரேலில் பயிற்சி

இந்தியப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த நூறு அதிகாரிகள் இஸ்ரேல் இளர்ச்சி அடக்கும் பயிற்சியை முடித்துக் கொண்டு நாடு திரும்பியிருப்பதாக இந்தியப் பத்திரிகையான பயனியர் செய்தி வெளியிட்டுள்ளது.

உத்தரப் பிரதேசம் மற்றும் பஞ்சாப மாநிலங்களில் இவர்கள் கிளர்ச்சி சேவையில் அமர்த்தப்படவுள்ளவர் என்றும் தெரிய வருகின்றது.

இச் செய்தியில் பஞ்சாப் மாநிலத்திலிருந்து திரட்டப்படும் பெலும பல புலனாய்வு அதிகாரிகள் இது போன்ற பயிற்சிகளுக்கு இஸ் (4ஆம் பக்கம் பார்க்க)



கட்டைக்காட்டில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஈழநாதம் பொறுப்பாளர் மேஜர் அழகனுக்கு மக்களும், புலிகளும் அஞ்சலி செலுத்துகின்றனர்.


## கூட்டுறவு ஊழியர்களுக்கு சென்னையில் பயிற்சி

வட - கிழக்கு மாகாண கூட்டுறவுத்துறையைச் சேர்ந்த ஊழியர்களுக்கு தமிழ் நாடு சென்னை கூட்டுறவுப் பயிற்சி கல்லூரியில் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் சி.பற்குணம் தெரிவித்தார்.

வருடம் ஒரு முறை முப்பது ஊழியர் கொண்ட மூன்று குழுவினர் இப்பயிற்சிக்கு அனுப்பப்படுவர். ஏழு மாதங்களுக்கு பயிற்சியளிக்கப்படும். அவர்கள் அங்கு சுற்றுலா ஒன்றையும் மேற்கொள்வர்.

## 45-ம் நாள் நினைவஞ்சலி



| அன்னை மடியில் | | ஆண்டவன் சந்நிதியில் |
|---|---|---|
| 18 - 10 - 1946 | | 18 - 05 - 1992 |

### கனகசபை-சண்முகலிங்கம்

காலஞ் சென்ற திரு சந்தையா கனகசபை (ஓய்வுபெற்ற அதிபர் சைவப்பாடசாலை முல்லைத்தீவு), திருமதி தங்கமுத்து கனகசபையினதும் ஏக புத்திரன் கனகசபை சண்முகலிங்கம் (செஞ்சிலுவைச் சங்க பொருளாளர், முல்லைத்தீவு) 18-05-1992 வற்றாப்பளைப் பொங்கலன்று நடைபெற்ற ஷெல் தாக்குதலில் மரணமானார் இவர் (முல்லைத்தீவு, றோயல் டிஸ்பென்ஸரி உரிமையாளர் Dr. திருமதி றஜனி சண்முகலிங்கத்தின் அன்புக் கணவரும், சக்தீஷன், ஷைலினி (மகாவித்தியாலய மாணவர்கள் முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புத் தந்தையும், கதிர்காமநாதன் (கனடா) மோகனராஜலிங்கம் முருகவரோதயன் (லண்டன்) ஸ்ரீதரன் (லண்டன்) கிருபானந்ததேவி, தியாகேஸ்வரி (சங்கீத ஆசிரியை) ஆகியோரின் அருமைச் சகோதரரும், மகேஸ்வரன், சிவநாதன், சாரதா, சுகந்தி, ஹம்ஸத்வனி (சங்கீத ஆசிரியை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

தகவல்

Dr. திருமதி றஜனி சண்முகலிங்கம்

(2376)

## ஓராண்டு நினைவஞ்சலி



### திருமதி நேசமணி இராஜரட்ணம்

(ஆசிரியை அச்சுவேலி மகாவித்தியாலயம்)

| உதயம் | அஸ்தமனம் |
|---|---|
| 14-06-1944 | 12-07-1991 |

திதி 01-07-92

பாச மணி விளக்கே பண்பின் சிகரமே
ஆண்டு ஒன்றான போதிலும்
நேசமுடன் யாம் நினைத்து நினைந்து
நெஞ்சம் உருகுதே: நீங்கள்
இங்கில்லாத துன்பம் பெருகுதே அம்மா!

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

அன்புக் கணவன், பிள்ளைகள், நண்பர்கள்

சிறுப்பிட்டி மத்தி
நீர்வேலி.

(2735)

## புலிகளுக்கு பம்பாயில் ஆயுதக்கிடங்கில்லை

(பம்பாய்)

பம்பாயில் புலிகளுக்கு ஆயுதக் கிடங்குகளோ, அல்லது ஆயுத விநியோக மையங்களோ எதுவுமில்லை என்று மகாராஷ்டிரா மாநில சட்ட சபையில் உள்துறை இணை அமைச்சர் பாபன்ராவ் திட்டவட்டமாக தெரிவித்தார்.

## பல்கலை மாணவர் தனிநபர் அட்டை பெறுக

யாழ். பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த பெரும்பாலான மாணவர்களின் நன்மை கருதி தனிநபர் அட்டையினைப் பூர்த்தி செய்வதற்கான இறுதித் திகதி எதிர்வரும் வெள்ளிக்கிழமை 3-07-92 அன்று வரை நீடிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் அறிவித்துள்ளது. இதுவரை தனி நபர் அட்டையினைப் பெறாத மாணவர்களும் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யப்பட்ட டிப்ளோமா கற்கை நெறிக்குரிய மாணவர்களும் இந்த தனிநபர் அட்டையினைப் பூர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். காலை 11.00-12 00 மணி வரையும் பிற்பகல் 5-00—6-00 மணிவரையும் நபர் அட்டையினை பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## அதிபராக பொறுப்பேற்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த இரண்டரை ஆண்டுகளாக யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் உப அதிபராகக் கடமையாற்றிய வண. ஏ. ஜே. பேனாட் இன்று ஜூலை முதலாம் திகதி மேற்படி கல்லூரியின் அதிபர்பதவியை பொறுப்பேற்கிறார்.

மெய்யியல் இறையியல் பட்டதாரியான இவர் தனது உயர்கல்வியை இங்கிலாந்தில் மேற்கொண்டவர் கல்வியியல்-மனித உரிமைகள் டிப்ளோமா பட்டமும், கல்வியியல் முதுகலை மாணிப்பட்டமும் பெற்ற இவர் கண்டி தேசிய குருமடத்தில் ஐந்து ஆண்டுகள் பேராசிரியராகக் கடமையாற்றியவர்.

கல்வியில் மட்டுமன்றி கல்வியுடன் இணைந்த விளையாட்டு கலைத்துறையில் ஈடுபாடுமுடைய இவர் சிறந்த விளையாட்டு வீரரும், இசைக் கலைஞருமாவார்.

## ஓவியர் பெனடிக்ற் படைப்புக்கள்

ஓவியர் பெனடிக்ற் அவர்களால் வரையப்பட்ட ஓவியங்கள் எழுதப்பட்ட கட்டுரைகள் அவரைப்பற்றிய கட்டுரைகள் வைத்திருப்போர் அவற்றை எதிர்வரும் ஜூலை மாதம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் எம்மிடம் சேர்ப்பித்து வைத்தால் அவற்றை எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ள அமரர் ஓவியர் திருவுருவ திரை நீக்கத்துடன் இணைந்து ஒரு காட்சியையும் ஒழுங்கு செய்ய உதவும்.

காட்சிப்பொருள்கள் உரியவர்களிடம் மீண்டும் சேர்ப்பிக்கப்படும். தொடர்புகொள்ள வேண்டியது-'' மிக்க்லைவ், 525/2, கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம். (சி/4631)

## நினைவு கூருகின்றோம்...

### 1992-07-01

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா-அனந்த புளியங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

★ மதன் (பழனியாண்டி செல்வராஜா - ஊவைபகம்)

இதே பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரட்டையர் உட்பட ஐந்து தமிழர்கள்.

திருக்கோணமலை பன்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 2 விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு வவுனியா பாவற்குளம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது கைதுசெய்யப்பட்டு காணாமல் போய், பின் சடலமாக மீட்கப்பட்ட தமிழ்ப் பொது மகன்.

1989 ஆம் ஆண்டு முல்லைத்தீவு - விசுவமடுப் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

இலங்கேஸ் (திசைவீரசிங்கம் இலங்கேஸ்வரன் கொண்டாவில் வடக்கு)

கணேஸ் (ஜெகநாதன் சந்திரராசா - விவேகானந்த - நகர், கிளிநொச்சி)

1990ஆம் ஆண்டு காங்கேசன்துறையில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

ஜக்சன் (துரைராசா இராசகுமார் - புதியதெரு, சுளிபுரம் மத்தி)

அம்பாறை - அறுகம்பை முகாமில் வைத்து சிறிலங்காப் படையினரால் ரயர்போட்டு எரித்துக்கொல்லப்பட்ட பொத்துவிலைச் சேர்ந்த 3 தமிழர்கள் - சம்மாந்துறைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 57 தமிழர்கள்.

திருக்கோணமலை அரசினர் மருத்துவமனைக்குள் புகுந்த சிறிலங்கா ஊர்காவற்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 35 தமிழர்கள்

கந்தளாய்ப் பகுதியில் 'ஜிகாத்குழு' வினரால் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட 24 தமிழர்கள்.

முல்லைத்தீவில், சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

வசாவிளான் ஆவடிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மாணவன்;

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

சிவானந்தன் (நடராசா நகுலேஸ்வரன் 208, ஜெயந்தி நகர், கிளிநொச்சி)

வினோ (பூரணவேலுப்பிள்ளை தனராஜ் - தவிப் பனைக்குடியேற்றம், வல்வெட்டித்துறை)

பலாலி முகாமிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் காயமுற்றிருந்து வீரச்சாவெய்திய - நாட்டுப்பற்றாளரான -

சிவபாதம் சுரேஸ்குமார் (ஏழாலை தெற்கு)

மட்டக்களப்பு - படுவான் கரைப்பகுதியைச் சுற்றி வளைத்த பெரிய போரதீவு முகாம் சிறிலங்கா இராணுவத்தினர், மற்றும் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 உயர் வகுப்பு மாணவர்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4629)

# புலிகளை ஆதரித்து சிறை செல்ல தமிழகத்தில் ஒரு லட்சம் பேர் தயார்!

**- டாக்டர் ராமதாஸ்**

விடுதலைப் புலிகளை ஆதரித்தால் ஏழு ஆண்டுகள் சிறை என்கிறார்கள்? ஏழு ஆண்டு என்றால் என்ன? எத்தனை ஆண்டுகளாயினும் சிறையில் இருக்கத் தயார். துணிவிருந்தால் கைது செய்து பார் ஒரு லட்சம் பேர் சிறை செல்லத் தயாராக இருக்கிறோம். என்று பாட்டாளி மக்கள்கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் கூறினார்.

சாத்தூர் வடக்குரத வீதியில் பாட்டாளி மக்கள் கட்சியின் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு பேசிய டாக்டர் ராமதாஸ் மேலும் கூறுகையில்,

ஈழ மக்கள் வரலாற்றைப் படித்தால் புலிகளை நிச்சயம் ஆதரிப்போம் என்று தான் நீங்களும் சொல்வீர்கள். ராஜீவ் காந்தியை நாங்கள் கொலை செய்யவில்லை என்று புலிகள் ஆரம்பத்திலேயே மறுத்தார்கள். இட்போதும் அதைத்தான் சொல்கிறார்கள் புலிகள் இயக்கத்தை தடை செய்ய அவர்கள் ராஜீவ் காந்தியை கொலை செய்தார்கள் என்ற காரணத்தைத்தான் மத்தியஅரசு சொல்லும் என்று நினைத்தார்கள்.

ஆனால் தமிழ்நாட்டிலிருந்து பத்து இளைஞர்களை புலிகள் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்தார்கள். அந்த இளைஞர்கள் மீண்டும் தமிழ் நாட்டுக்கு திரும்பி வந்து ''தமிழர் மீட்புப் படை'' என்ற அமைப்பை ஏற்படுத்தி தமிழ் நாட்டை இந்தியாவிலிருந்து துண்டாடுவது, ஒரு அகன்ற தமிழகத்தை உருவாக்குவது என்று திட்டமிட்டார்கள் என்று ஒரு கற்பனையான நடக்காத ஒரு கதையை சொன்னார்கள். சவான் தேடித் தேடி இந்தக் காரணத்தை கண்டு பிடித்தார்.

''தமிழர் மீட்புப் படை'' என்ற பத்து இளைஞர்கள். அந்த பத்து இளைஞர்களும் இங்கே என்ன பயங்கரவாதம் செய்தார்கள்? அரசாங்கத்தின் மூன்று மாடிக் கட்டடத்தை தகர்த்தார்களா? ரெயிலைக் கவிழ்த்தார்களா? பெரிய பெரிய பாலங்களைத் தகர்த்தார்களா? அப்படி எந்த வன்முறையும் நடக்கவில்லை.

விடுதலைப்புலிகள் அமைப்பு ஏதும் தமிழகத்தில் இல்லை. அதை ஜெயலலிதாவே சட்டசபையில் சொல்லியிருக்கிறார். ஆர். எஸ் எஸ். அமைப்பு ஓர் அகன்ற இந்து ராஜ்யம் அமைப்போம் என்று கூறி இங்கே இயங்கிக் கொண்டிருக்கிறது. அதை தடை செய்யவில்லை.

## சிறை செல்லத் தயார்

தடை செய்த பிறகும் விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் கட்சிகளை தடைசெய்யவேண்டும். அந்த தலைவர்களை உள்ளே போடவேண்டும் என்று காங்கிரஸ் தலைவர்கள் சொலகிறார்கள். அ.தி.மு.க. தலைவர்கள் சொல்கிறார்கள் நாங்கள் அதற்கு தயாராக இருக்கிறோம்.

இலங்கையில் உள்ள நாற்பது இலட்சம் தமிழர்களின் நிலையைப் பார்த்த பின்பு நாங்களும் தமிழர்களாகஇருப்பதால் அவர்களை ஆதரிக்கின்றோம். அதில் என்ன தவறு? அந்த நாட்டை ஆட்சி செய்தவர்கள் இன்றைககுதங்களுக்கு ஒரு நாடு செய்ய வேண்டும். சுதந்திர காற்றை தாங்கள் சுவாசிக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். கடைசியில் வேறு வழியில்லாமல் தான் அந்த இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள், வரதராஜப் பெருமாள் இங்கு ஓடிவரும் போது தனி ஈழ நாட்டை பிரகடனப்படுத்துகிறேன் என்று சொல்லிவிட்டு வருகிறார். அப்படி சொல்லாதே நாங்கள் அங்கீகரிக்க மாட்டோம் என்று இந்திய அரசு இன்று வரை சொல்லவில்லை. ஆனால் தினந்தோறும் ஒரு இலட்சம் செலவு செய்து அவருக்கு பாதுகாப்புக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

மூவாயிரம் பெண்கள் அங்கு ஏ. கே 47 ஏந்தி சிங்கள இராணுவத்தோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதில் அவர்கள் கையிழந்து காலிழந்து இங்கேவரும்போது இங்கே வராதே என்று இதயம் உள்ள எவரேனும் கூற முடியுமா? சூடு சொரணை இருக்கிற தமிழன் பேசாமல் இருக்க முடியுமா? அவர்கள் இங்கே வைத்தியத்திற்குத் தானே வருகிறார்கள்?

வை. கோபாலசாமி தம்பி என்ன செய்தார்? அதைத் தானே செய்தார்? அதற்கு அந்தக் கட்சியின் தலைவர் என்ன சொன்னார்? அதற்குள் நான் போக விரும்பவில்லை சுப்புலட்சுமி என்ன செய்தார்? அவர்களுக்குத் துணி எடுத்துக் கொடுத்தார். அதில் என்ன தவறு?

நீங்கள் அவர்களுக்கு ஆயுதம் கொடுத்தீர்கள்? பயிற்சி கொடுத்தீர்கள்? ஆனால் துணி எடுத்துக் கொடுத்ததைத் தவறு என்று கூறுகிறீர்கள்? நூறு இளைஞர்கள் தமிழகத்தில் சயனைட் சாப்பிட்டு இறந்தார்கள். அவர்கள் மருத்துவ உதவிக்குத் தானே இங்கே வந்தார்கள். அவர்களைக் கைது செய்யும் போது தான் இறந்தார்கள். அவர்கள் கையில் ஆயுதம் இருந்தது. ஆனால் எந்த அதிகாரியையாவது சுட்டார்களா? ஏதும் இல்லை.

தமிழகத்தில் எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றன. அதை எல்லாம் விட்டு விட்டு புலிகளுக்குத் தடை விதிக்கப் பட்டு உள்ளது. உலகில் இருக்கின்ற தமிழர்கள் எல்லாம் புலிகளை ஆதரிக்கிறார்கள். ஆனால் எங்கு அவர்களுக்கு அதிக ஆதரவு கொடுக்க வேண்டுமோ அங்கு நாம் புலிகளை ஆதரித்தால் என்ன ஆகும் என்று நினைக்கிறோம்.

## சிறைச்சாலைதாங்காது

நாங்கள் புலிகளை ஆதரிக்கின்றோம். அதற்காக ஒரு லட்சம்பேர்உள்ளேபோவோம் ஒரு லட்சம் பேர் உள்ளே போனால்எத்தனை நாள்தான் சாப்பாடு போடமுடியும்? சிறைச்சாலையில் அவ்வளவு பேருக்குத் தானே இடம் இருக்கின்றது. தமிழர்களுக்காக நாங்கள் உள்ளேபோகிறோம்.

தமிழன்என்றுபேசக்கூடாது தமிழ் என்று பேசக் கூடாது என்று சொல்கிறார்கள். ஒரு காலத்தில் தமிழே படிக்கக் கூடாது என்று சட்டம் போட்டாலும் போடுவார்கள். பச்சை குத்திக் கொள்கிறேன் என்று மந்திரி எம். எல். ஏ எல்லாம் வரிசையில் போய் நிற்கிறார்கள் இது நாடா?

கர்நாடகத்தில்தமிழர்களின் சொத்துக்கள் முந்நூறு கோடி ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டது. என்னநடவடிக்கைஎடுத்தார்கள். ஒன்றரை லட்சம் தமிழர்கள் இங்கே ஓடி வந்தார்கள். அவர்களில் ஒருவரையாவது அங்கே திரும்பக் கொண்டு போய் குடியமர்த்த முடிந்ததா? முடியவில்லை என்றால் இறங்கி விட வேண்டியது தானே.

இப்போதுமக்களுக்குநிறைய இனமாகக் கொடுக்கிறார்கள். பாட்டாளி மக்கள் கட்சி என்ன இனாமாகக் கொடுக்க முடியும்? ஒரு கோடி குண்டூசி வாங்கி நமது மக்களிடம் கொடுத்து உணர்வு இருக்கிறதா என்று குத்திப் பார்த்துக் கொள்ளுங்கள் என்றும் குறிப்பிட்டார்.

---

# ஊழல் புரிந்த ஜெயலலிதாவால் அரசிடம் எதையும் பெறமுடியவில்லை

**· பண்ருட்டி ராமச்சந்திரன்**

[சென்னை]

காய்ந்த மாட்டிற்கு கம்பங் கொல்லை கிடைத்தது போல ஜெயலலிதாவிற்கு ஆட்சி கிடைத்து விட்டது என்று பண்ருட்டி ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இருபது கோடி ரூபா மதிப்புள்ள அரசு நிலத்தை இரண்டு கோடிக்கு வாங்கி ஊழல் புரிந்துள்ள ஜெயலலிதாவின் செயல் ஒன்றே அ. தி. மு. க. அரசை பதவி நீக்கம் செய்வதற்குப் போதுமானது எனவும் அவர் தெரிவித்தார்.

பதவிக்குப் போனது பணம் சம்பாதிக்கத்தான் என்ற எண்ணம் மக்கள் மத்தியிலிருந்து வருகிறது. அதை உறுதிப்படுத்தும் வகையில் சுமார் 20 கோடி ரூபா பெறுமானமுள்ள அரசு நிலத்தை முதல் அமைச்சர் ஜெயலலிதா இரண்டு கோடிக்கு வாங்கி பத்திரத்தையும் முடித்து விட்டார். தெரிந்தது தினையளவென்றால் இன்னும் தெரியாதது பனையளவு உள்ளது.

எம். ஜி. ஆர். மறைந்தவுடன் தன்னை அநாதை என்று மேடைதோறும் அறிமுகப் படுத்திக் கொண்ட ஜெயலலிதா கோடி கோடியாக சொத்து வாங்குகிறார் என்றால் இது மிகப் பெரிய ஊழல் மோசடி மட்டுமல்ல; ஜனநாயகத்தையே கேலிக் கூத்தாக்குவது போலாகும்.

பத்துக் கோடிரூபா திட்டம். ஊழல் அரசாங்கத்தால் 40 கோடி ரூபா செலவுக்கு உயர்ந்துள்ளது. ஏற்கனவே வெற்று ஆடம்பரங்களில் ஆகிவருகிற செலவே அதிகம் என்றால் இத்தகைய செலவுகளும் ஏராளம். இதைச் சரிக்கட்டத்தான் மின் கட்டண உயர்வு, பஸ் கட்டண உயர்வு, அரிசி விலை உயர்வு என்றெல்லாம் மக்களை வாட்டி வதைக்கின்ற வரி உயர்வு.

ஜெயலலிதா அரசு நித்தம் நித்தம் பணம் வாங்கும் மொத்த ஊழல் அரசு என்பதால் தமிழ் நாட்டின் உரிமைகளை இந்திய அரசிடம் தட்டிக் கேட்க முடியவில்லை. காவிரிப் பிரச்சினையானாலும், கர்நாடக தமிழர் பிரச்சினையானாலும், தமிழ் நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய நிதிப்பிரச்சினையானாலும் ஜெயலலிதாவால் எதையும் இந்திய அரசிடம் கேட்டுப் பெற முடியவில்லை. மடியில் கனம் உள்ளதால் வழியில் பயம் ஏற்படுவது இயல்பு தானே?

இவற்றையெல்லாம் திசை திருப்ப ஜெயலலிதாவுக்குக் கிடைத்திருக்கின்ற ஒரே பிரச்சினை விடுதலைப்புலிகள் இயக்கம். ஏதோ விடுதலைப் புலிகள் இயக்கம் விழித்தெழுந்தால் தமிழ்நாட்டில் குண்டு மாரி பொழிவது போலவும் ஜெயலலிதா அதை அடக்கி ஆள்வது போலவும் ஒரு மாய வித்தை காட்டி தமிழ்நாட்டு மக்களை ஏமாற்ற முயல்கிறார்

ஆனால் தமிழ்நாட்டு மக்கள் ஜெயலலிதாவை நன்கு புரிந்து கொண்டார்கள். அவர்கள் எதிர்பார்ப்பது ஜெயலலிதாவை விரட்டியடிக்க ஒரு வாய்ப்பை மட்டும். அந்த வாய்ப்பைக்கொண்டு வருவதே நம் போன்றவர்களின் கடமை ஆகும்.

இவ்வாறு பண்ருட்டி ராமச்சந்திரன் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

---

## ஆசிரியர் தலையங்கம் வெளிவரவில்லை

தவிர்க்க முடியாத காரணங்களினால் இன்று ஆசிரியர் தலையங்கம் வெளிவரவில்லையென்பதனை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.

---

## இந்தியக்குடியரசுத் தலைவர் தேர்தல்

# மனச்சாட்சிப்படிவாக்களிக்க வசதி செய்யக் கோரிக்கை

(டில்லி)

இந்தியக் குடியரசுத் தலைவர் தேர்தலில் தமது மனச்சாட்சிப்படி வாக்களிக்க இடமளிக்க வேண்டுமென ஜனதா தள் கட்சியைச் சேர்ந்த பல தலைவர்கள் தலைமையைக் கோரியுள்ளனர்.

பாரதிய ஜனதாக் கட்சியின் ஆதரவைப் பெற்றுள்ள பேராசிரியர் ஜீ ஜி. சுவெல்லை கட்சி முழுமையாக ஆதரிப்பது கட்சியை பாரதிய ஜனதாக் கட்சியுடன் இனங்காட்டிவிடும் என்றும் சுட்டிக்காட்டி ஜனதா தள் கட்சித்தலைவர் எஸ். ஆர் பொம்மை எழுதியுள்ள கடிதமொன்றில் இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். முகமட்ஜெருசலம், சந்திரஜித் யாதவ், ஷெரீக்புதீன், சிமன்பாயிமேத்தா, ராஜ்மோகன்காந்தி மற்றும் எம் ஜி. கே. மேனன் ஆகியோர் இக்கடிதத்தில் கையெழுத்து இட்டு உள்ளனர்.

---

# கடதாசி கூட்டுத்தாபனத்தில் ஆட்குறைப்பு நடவடிக்கை

தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தில் தற்போது ஆட்குறைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது

வாழைச்சேனை காகித ஆலையிலிருந்து இம்மாதம் வரை 89 ஊழியர்கள் ஒய்வு பெறுகின்றனர் என்றும் எம்பிலிப்பிட்டிய ஆலை, கொழும்பு தலைமைச்செயலகம் ஆகியவற்றிலும் கணிசமான ஊழியர்கள் ஒய்வுபெறுகின்றவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வாழைச்சேனை கடதாசிக் கூட்டுத்தாபனம் கம்பனியாக்கப்படுவதையடுத்து கூட்டுத்தாபனத்தின் பெயர் யூலை முதலாம் திகதிமுதல் ''தேசிய கடதாசி கம்பனி லிமிட்டெட்'' எனப் பெயர் மாற்றம் செய்யப்படுகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

யூலை மாதத்திலிருந்து கூட்டுத்தாபனத்தை அரசாங்க திறைசேரி பொறுப்பேற்பதுடன் தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் மூலதனம் அனைத்தும் பங்கு மூலதனமாக்கப் படவுள்ளதாகவும், கூட்டுத்தாபனம் திறைசேரியினால் தனியார் கம்பனி ஒன்றிடம் கையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டுத்தாபனம் கம்பனியாகும் போது ஊழியர்களும் பங்குதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என்றும், இதன்படி கூட்டுத்தாபனத்தின் மொத்தப் பங்குகளில் அறுபது வீதமான பங்குகள் கம்பனிக்கு சொந்தமாகும் முப்பது வீதமான பங்குகள் பொது மக்களுக்கு விற்பனைக்கு விடப்படும் பத்து வீதமான பங்குகள் ஊழியர்களின் உடைமையாக்கப்பட்டு அவர்களது சேவை மூப்பை அடிப்படையாகக் கொண்டு ஊழியர்களுக்கு வழங்கப்படும் என வாழைச்சேனை காகித ஆலை முகாமையாளர் இ கணபதிப்பிள்ளை தெரிவித்தார்.

---

## பம்பலப்பிட்டியில்

# தமிழ் இளைஞர்களின் தடுப்பு முகாம்

(கொழும்பு)

கொழும்பு, பம்பலப்பிட்டி பகுதியில் பொலிஸ் நிலைய பாணியில் தமிழ் இளைஞர்களால் நடத்தப்பட்டு வந்த தடுப்புக்காவல் நிலையமொன்றை பொலிசார் கண்டு பிடித்துள்ளனர். இந்த நடவடிக்கையின் போது ஆட்கடத்தல் நடவடிக்கைகளோடு தொடர்புடைய ஆறு தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைதாகினர். கொழும்பில் ஆட்களைக் கடத்துதல், பயமுறுத்துதல், பணம் பறித்தல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த தமிழ் இளைஞர்களின் குழுவொன்று பொலிசாரிடம் சிக்கியதை அடுத்து இவர்களால் நடத்தப்பட்ட இரகசியத் தடுப்பு நிலையமும் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஆறு இளைஞர்களும் வடக்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்தோராவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

வட்டிக்கு பணம் கொடுக்கும் பண முதலாளிகள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்கள், ஜொக்கிகள், ஆகியோருக்குச் சேரவேண்டிய பணத்தைக் கொடுக்காமல் ஏமாற்றி வருபவர்களை கடத்திச் சென்று பணத்தை அறவிட்டுக் கொடுப்பதில் இக்கோஷ்டியினர் பயன்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# சில இழப்புகள் ஆழமாகப் பதிந்து நெஞ்சை ஊடுருவிச் செல்வதுண்டு

## - மேஜர் அழகன் இறுதி அஞ்சலியில் யோகி

(குருநகர்)

"இழப்புக்களைஎதிர்கொள்ளும் மனோபாவம் கொண்டவர்களாயினும் சில இழப்புக்கள் ஆழமாகப் பதிந்து மெதுமெதுவாக உள்ளத்தை ஊடுருவிச் செல்வதையும் மிக வேதனையுடன் அனுபவிக்க நேர்வதுண்டு"

நேற்று ஈழநாதம் காரியாலயத்தில் நடைபெற்ற மேஜர் அழகனின் (நிர்வாகப் பொறுப்பாளர் ஈழநாதம்) அஞ்சலி வைபவத்தில் கலந்து உரையாற்றுகையில் புலிகள் பிரமுகர் திரு. யோகரட்ணம் யோகி மேற்கண்டவாறு கூறினார்.

அஞ்சலி வைபவத்திற்கு ஈழநாதம் பிரதம ஆசிரியர் திரு ஜெயராஜ் தலைமை வகித்தார். முன்பாக இரு நிமிடநேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தலைமையுரையில் ஈழநாதம் பிரதம ஆசிரியர் திரு. ஜெயராஜ் துக்கம் தொண்டையை அடைக்கப் பேசுகையில்,

மேஜர் அழகன் ஈழநாதம் பத்திரிகையை உயிருக்கும் மேலாக நேசித்தார். அதனால் அவர் சொல்வார். "அண்ணே நீங்களோ நானோ சாகநேரலாம் ஆனால் ஈழநாதம் செத்து விடாமல் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்க வேண்டுமென்பார்." இவ்வாறு அவர் தெரிவித்தார்.

திரு. மு-திருநாவுக்கரசு அஞ்சலி உரையில் கூறியதாவது: "மேஜர் அழகன் சிறுவனாக இருந்தபோதும் ஈழநாதம் நிறுவனத்தை மிகத் திறம்பட இயக்கி இப்பொழுது இருக்கும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தார். என்றும் அவர் வாழ்ந்திருந்தால் எதிர்வரும் மாதத்தில் ஈழநாதம் பத்திரிகையில் மேலும் புதிய அம்சங்களைச் சேர்த்து புதுமை படைக்கும் திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருந்ததை நானறிவேன்" என்றார்.

யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் திரு. இளம்பரிதி தமது அஞ்சலி உரையில்:

புலிகள் களத்தில் படைத்து வரும் வீரசாதனைகளை புகைப்படங்களுடன் வெளியிட்டு மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்த வேண்டும்என்ற வேட்கையுடனே மேஜர் அழகன் யுத்தகளத்திற்கு செய்தி சேகரிக்கச்சென்று வீரச்சாவை அடையநேர்ந்தது" என்றார்.

## மேஜர் அழகனுக்கு மக்கள் இறுதி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காட்டுக் களத்தில் நேற்று முன்தினம் வீரச்சாவடைந்த ஈழநாதம் மக்கள் தினசரியின் நிர்வாகப் பொறுப்பாளர் மேஜர் அழகன் (செல்வராஜா இளங்கோ) அவர்களின் புகழுடலுக்கு ஆயிரக் கணக்கான மக்கள் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

நேற்றுமுற்பகல் 11-00 மணி வரை அவரது புகழுடல் சாவகச்சேரியில் உள்ள அவரது இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. தொடர்ந்து அங்கிருந்து பான்ட் இசை முழங்க வீதி பவனியாக எடுத்துச் செல்லப்பட்ட புகழுடல் ஈழநாதம் அலுவலகத்தில் வைக்கப்பட்டது இவ் அலுவலகத்தில் ஏற்கனவே ஆயிரக் கணக்கில் குழுமியிருந்த மக்கள் கூட்டமும் ஈழநாதத்தின் பணியாளர்களும் புகழுடலைக் கண்டதும் நெஞ்சம் நெகிழ்ந்து கண்ணீர் மல்க நின்றனர். மலர் மாலைகள் சூட்டியும, மலர் வளையங்கள் வைத்தும், மலர்கள் தூவியும் மக்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். பாடசாலை மாணவர்கள், ஈழநாதத்தின் வாசகர்கள், அபிமானிகள், நண்பர்கள், சகோதரப் பத்திரிகைகளின் ஊழியர்கள், மற்றும் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் ஆகியோரும் இந்தஅஞ்சலிநிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். அத்துடன் யாழ். மாவட்டத்தின் அரச திணைக்களத் தலைவர்கள், அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

பிற்பகல் 2-00 மணியளவில் விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தினரின் பான்ட் வாத்திய இசையுடனும் அணிவகுப்பு மரியாதையுடனும் புகழுடல் ஈழநாதம் அலுவலகத்தில் இருந்து நாவலர் வீதி, சிலன்வீதி, ஆஸ்பத்திரி வீதி, கச்சேரி நல்லூர் வீதியூடாக எடுத்துச் செல்லப்பட்டு ஈழநாதம் இளை அலுவலகத்தில் மக்கள் அஞ்சலிக்காகவைக்கப் பட்டது. தொடர்ந்து அங்கிருந்துதென்மராட்சிக்குஎடுத்துச் செல்லப்பட்ட புகழுடல் கல்வயல் கண்ணன் பாலர் பாடசாலையிலும் அதைத் தொடர்ந்து சாவகச்சேரி பொதுச் சந்தை மைதானத்திலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப் பட்டது. தொடர்ந்து அங்கிருந்து எடுத்துச் செல்லப் பட்ட புகழுடல் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் உரிய இராணுவ மரியாதைகளுடனும் சம்பிரதாயங்களுடனும் புதைகுழியில் விதைக்கப்பட்டது

(க), (ச). (பா). (21)

---

யாழ் இந்துக் கல்லூரி அன்னை உதிரம் வடிக்கின்றாள்



எமது அன்னை மணிமீட்புப் போரில் தனது புகழ் பூத்த மைந்தன் ஒருவனை மேலும் அர்ப்பணித்துள்ளாள்

**மேஜர் அழகா**

உன்னால் நாம் கௌரவம் அடைந்தோம் உன் வழியில் நாம் நூற்றுக்கணக்கில் தொடர்வோம்.

யாழ் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் 30. 6. 92

யாழ் இந்து பழைய மாணவர் சங்கம்

(சி4630)

---

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம் வைத்திலிங்கம்

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலம் சென்ற கந்தையா வைத்திலிங்கம் அவர்களின் அன்பு மனைவி இரத்தினம் அவர்கள் 29-06-92 அன்று பெரியகுளம் கண்டாவளையில் காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பெரியகுளம் மயானத்தில் 30-06-92 அன்று பி. ப. 4 00 மணிக்கு தகனம் செய்யப்பட்டது. உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

இல, 59, பெரியகுளம், கண்டாவளை (2739)

தகவல்: வை. பரமலிங்கம்

---

## அரசஊழியருக்கு விசேட அடையாள அட்டைகள்

மன்னாரில் அரசாங்க ஊழியருக்கும் மீனவர்களுக்கும் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய அடையாள அட்டை போன்ற வடிவத்திலுள்ள இவ் அடையாள அட்டையில் அரச அதிபரும் இராணுவ அதிகாரியும் கையொப்பம இட்டுள்ளனர்.

---

# வாகரையில் 13 தமிழர் பலி

## மக்கள் கூட்டம் மீது சூடு

மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் கண்மூடித் தனமான தாக்குதலால் 13 தமிழ் பொதுமக்கள் பலியாகினர்.

கடந்த ஞாயிறன்று இப்பகுதியில் மக்கள்கூட்டம் ஒன்றின் மீது இராணுவத்தினர் கண்டபடி சுட்டதினாலேயே 13 பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் விடுதலைப் புலிகளாக இருக்கலாம் என தாம் நம்புவதாக அரசு தரப்பு செய்திகள் தெரிவித்தன ஆனால் விடுதலைப்புலிகளுக்குக் கிடைத்த தகவலின்படி இந்த 13 பேரும் அப்பாவிப் பொது மக்களே என நம்பகரமாகத் தெரிய வந்துள்ளது.

மட்டக்களப்பு வாகரைக் கிராமம் கடந்த ஒருமாதகாலமாக சிறிலங்கா இராணுவத்தினதும் தேசவிரோதிகளினதும் சுற்றிவளைப்பிற்கு உள்ளாகியிருந்தது. இம்மக்களுக்கு உணவுப் பொருள்களையும் மருந்துப் பொருள்களையும் வழங்க இராணுவம் தடைவிதித்திருந்தது.

---

இந்திய

ரேல் மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு அனுப்பப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது

வேவு பார்ப்பது தீவிரவாதத்தை அடக்கும் போர்த் தந்திரங்களையும், முறைகளையும் பற்றிப பயிற்சிகளைப் பெற்றிருக்கும் நூற்றுக்கும் அதிகமானவர்கள் குறிப்பிட்ட இடங்களில் நடவடிக்கையை வரும் குளிர்காலத்தில் மேற்கொள்வதற்கு தயார்நிலையில் உள்ளார்கள் என்று பயனியர் பத்திரிகை தெரிவிக்கிறது.

இந்தியாவின் புலனாய்வு நிறுவனமான 'றோ'வைச் சேர்ந்த அதிகாரிகளே இந்தப் பயிற்சியைப் பெற்றிருக்கிறார்கள்என்று தெரிவிக்கப்படுகிறது

---

மட்டு.

னிச்சை ஆகிய இராணுவ முகாம்களில் உள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நெல்லிக்காடு, காலம்போட்டமடு, சாமந்தி ஆறு, பன்சேனை, தந்தாரமலை ஆகிய பகுதிகளில் கடுமையான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவாறு முன்னேறி வந்தனர்.

இதே நேரம் இராணுவத்திற்கு உதவியாக உலங்குவானூர்தி ஒன்று இடைவிடாத துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது. இத் தாக்குதல்களால் 20 க்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப் பட்டனர்.

அத்துடன் ஒன்பதுக்கு மேற்பட்ட பொதுமக்களை இராணுவம் கைது செய்து கொண்டு சென்றுள்ளது. பல வீடுகள் எரித்து நாசமாக்கப்பட்டன.

இவர்கள்கடந்த ஞாயிறன்று மாலையே முகாம் திரும்பிச் சென்றனர்.

---

வவுனியாப்

வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ள தமிழ் மக்கள் இடம் பெயர்ந்துள்ளமை தெரிந்தே.

---

புலிகளின

பொலிஸ் படையைச் சேர்ந்த பொலிஸாரில் ஐவரே புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி படுகாயமடைந்தனர் என்று இராணுவ தரப்பில் சொல்லப் படுகிறது.

---

## புளொட் கும்பல் ஓட்டம்

வவுனியா பேயாடிகுளம் இராணுவ காவலரண் பகுதியில் விடுதலைப்புலிகள் மீது தாக்குதல் நடாத்தவென பதுங்கியிருந்த புளொட் தேசத்துரோகிகள் புலிகளைக் கண்டதும் பயந்து ஓடினர்.

நேற்று முன்தினம் பகல் 11.15 மணியளவில் இராணுவ காவலரண் பகுதியிலிருந்து 500 யார் தூரத்தில் பதுங்கியிருந்த இவர்கள் இவ்வாறு புலிகளைக் கண்டதும் பயந்து பின்வாங்கி ஓடினர். இவர்கள் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை.

---

புலிகள்

ணன் (விசு வீராசாமி சுதாகரன் களகர் தோட்டம், காங்கேசன்துறை) வீரவேங்கை சுத்தரசன் (குபேரன்-பாலகப் பிரமணியம் இரிதரன் காளிகோயிலடி, சங்கானை) வீரவேங்கை மறைச்செல்வன் (அமிர்தன் - குமாரவேல் பெனிலோ இல 12, Tc.லேன், மானிப்பாய்). வீரவேங்கை இசைவாணன் (தேன் - நடராஜா வில்வராஜா சென்றல் கேம்ப் அம்பாறை) ஆகியோரேவீரச்சாவைத் தழுவிக்கொண்டவர்களாவர்

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இந்த நான்கு மாவீரர்களினதும் புகழுடல்கள் இன்று மாலை 3-00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அஞ்சலிக் கூட்டத்தைத் தொடர்ந்து புகழுடல்கள் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் புதை குழிகளில் விதைக்கப்படும்.

---

புலிகள்

ஏற்பட்டுள்ளது. பவன், டாங்கிகள் உட்பட ஆறு கவசவாகனங்கள் சேதமடைந்தன. தொடர்ந்து விமானக்குண்டு வீச்சும் எறிகணைத்தாக்குதல்களும் நடந்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை புல்லாவெளி சந்தியில் தற்பொழுது நிலைகொண்டுள்ள இராணுவம் பெரும் இழப்புக்கள் ஏற்பட்ட பின்னரும் முன்னேறுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

30. 06. 1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 4648

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-

24-883 28-1636 41-5015. 26-676, 28-1706, 24-9390, 24-5121. 26-8352 27-5482, 26 3654 26-1785, 27-4070, 37-2025 22-6696, 27 4435, 27-5417, 34-4610, 26-6745, 28-6640 28-7261, 26-2737 26-6505, 28-2343, 24-8603, 24-4457, 26-3937, 25-7312, 71-859.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:

42-3924. 27-7537, 40-2394. 26-2277 42-2432, 26-952, 42-3419, 24-4465. 27-4289, 42-1694, 27-1141, 36-4582,

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது